RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22429

OPEN ACCESS

# புதுமைப்பித்தன் சிறுகதைகளுள் அடித்தள மக்களின் வாழ்வியல் சித்தரிப்பு

## உ. மகேந்திரன் [அ, *]

[அ] ஆங்கிலத் துறை, சர் தியாகராயா கல்லூரி, சென்னை-600021, தமிழ்நாடு, இந்தியா.

# The Biographical Portrayal of the Underprivileged People in Puthumaippithan's Short Stories

**U. Mahendran [a, *]**

[a] Department of English, Sir Theagaraya College, Chennai-600021, Tamil Nadu, India

* Corresponding Author: mahendranlitmcc@gmail.com

Received: 30-03-2022
Revised: 03-09-2022
Accepted: 28-09-2022
Published: 16-10-2022

Check for updates

**ABSTRACT**

This article deals with history and literature in a straight line. By maintaining a balance between the two, it pays utmost attention to the inevitable reality of the life of the poor. It has to be demonstrated in terms of widely known historical aspects. This article will explain how such aspects apply to literature as well. Here, since literature and history travel hand in hand here, the nature of history that emerges from the structure of literature is going to assume significance. The elite, which does not care much about the underlying individuals, seeks to constrain the historical error of history with the help of a biographical portrayal of the poor. The upper-class historical writings that are thus restricted can be called into question. They can identify areas that have been excluded with political flexibility. They will be a factor in the emergence of new forms to reproduce the lasting impact and scope they have had on the lives of the lower class. For this, the method of collecting and analyzing data that has been refuted by the history within which literature contains becomes essential. Such a method will only to some extent help to gather the realistic environment of societies that have been pushed back. The reality is that what remains has to be compiled in a completely realistic historical context by examining the historical versions that have been carried out, either from the history in which literature speaks or in its way. Or it is necessary to uphold as history the literary forms in circulation held by societies that are accustomed to real life. There is no doubt that elite historical theories will be an obstacle to such an attempt. However, before establishing such a democratic historical equation, it is inevitable that the historical data that is mixed in the mainstream literature will be examined and that is what this article seeks to do.

**Keywords:** Biographical Portrayal, Puthumaippithan, Poor, Upper Class

## முன்னுரை

மனிதன் தனிமையையும் தனித்துவத்தையும் அதிகம் தேர்ந்தெடுத்தாலும் அவனால் குழுவாக இயங்காமல் இருக்க முடிவதில்லை. குழுக்களுக்கும் அவை புழங்கும் நிலவியல் தன்மைக்கு ஏற்றவாறு ஒரு அடையாளம் உருவாவது இயல்பே. அதில் சிக்கல் ஏதும் இருக்கப்போவதில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட குழுவின் வரலாற்றை ஒரு தனிமனிதன் ஆவணப்படுத்த முயல்கையில் கருத்தியல் பிரச்சனை எழுவதை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அத்தகு இடமே அரசியலின் தோற்றுவாய் என்பது மிகையல்ல. அதிலும் அவருக்கு வரலாற்று ஆசிரியர் என்கிற அடையாளம்

கிடைக்கையில் வெளிப்படுகிற தனிமனித கவனம் அவரை அதிகார பூர்வ வரலாற்று நிபுணராகவே என்ன வைக்கிறது. அந்த எண்ணத்தின் விளைவாக அவர் தருகிற சுய பிரதிபலிப்பு வரலாற்று ஆவணம் அத்தகு பார்வையில் அணுகப்படாமல் போகிறது. அது சில எளிய மனிதர்களின் வாழ்வியல் இருட்டடிப்பிற்கு வித்திடுவதை தவிர்த்து கடப்பது பொது புத்தியின் அறிவுப்பிழை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தப் பொருண்மையில் புதுமைப்பித்தனின் சில சிறுகதைகள் இந்தக் கட்டுரையில் அலசப்பட இருக்கிறது (Pudhumaipithan, 2018).

## வரலாற்று புனைவும் இலக்கியம் கொண்டிருக்கும் வரலாறும்

நவீன கோட்பாடுகளின் தாக்கத்தால் வரலாறு குறித்த புரிதல் பெரும் மாறுதலுக்கு உள்ளாகி இருக்கிறது. அது உள்ளடக்கத்தை மட்டுமல்ல அதனை புனைகிற செயலிலும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்த தவறவில்லை (Mills, 1997). பலதரப்பட்ட வரலாற்றையும் அதனை எழுதிய வரலாற்று ஆசிரியர்களையும் கேள்விக்கு உட்படுத்தியதே அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களில் குறிப்பிடத்தக்க ஒன்று (Carr, 1967). தகவல்களை தெரிவு செய்து அவற்றை வரலாறாக வடிவமைப்பதில் வரலாற்று ஆசிரியருக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை உன்னிப்பாக பார்க்க வேண்டிய அவசியம் அதிகம் எழுந்தது இதனால் தான். வரலாறு தனிமனித அறிவினால் சலவை செய்யப்பட்டு வெளிப்படும் பொழுது அதன் போக்கில் காணக் கிடைக்கிற மாற்றம் சாதாரணமாக கடக்கத்தக்கது அன்று. காரணம் அது உருவாக்கப்பட்டவரின் எண்ணத்தை உள்ளீடாகக் கொண்டு புதிதாக தோற்றுவிக்க பட்டதாக இருப்பதால் (Catherine & Greenblatt, 2001). தனி மனிதனின் தெளிவு செய்கிற மற்றும் தவிர்க்கிற முயற்சியின் வரலாற்று தகவல்கள் தீர்மானிக்கப்பட்டு எழுத்தாக்கம் பெறுகின்றன. சிக்கலுக்குரிய இடமாக தவிர்க்கப்பட்ட வரலாற்று தகவல்கள் இருக்கின்றன என்பதை அங்கீகரிப்பது அவசியம். விழிப்புடன் செய்யப்படுகிற தவிர்த்தலில் இருட்டடிப்புக்கு உள்ளாகிற வரலாறாகாத பகுதிகள் வரலாற்று ஆவணங்களில் இடம் பெறும் தகுதி அற்றவை அல்ல என்பதும் நிதர்சனம் (Pudhumaipithan, 2018; Eagleton, 2008).

இந்தப் புரிதலை அடித்தளமாகக் கொண்டு புதுமைப்பித்தனின் சிறுகதைகள் சிலவற்றை வாசிப்புக்கு உட்படுத்தும்போது அவற்றில் பொதிந்து கிடக்கிற தரவுகள் வஞ்சிக்கப்பட்ட தனிமனிதர்களின் வரலாறாக காணக் கிடைக்கின்றன. அவ்வாறாக சிலவற்றை எடுத்து விளக்கிச் சொல்வதற்கு முன்பாக, இலக்கியத்திற்குள் நிறைந்து கிடக்கும் வரலாற்று அம்சத்தை விளக்குவது கட்டாயமாகிறது. எந்த ஒரு சூழலுக்கும் அப்பாற்பட்டு இலக்கியம் வடிக்கப்பட்டதாக வரலாறு கிடையாது. கால ஓட்டத்தை படம் பிடித்துக் காட்டுகிற கற்பனை ஆவணமாக இலக்கிய எழுத்துக்கள் இருந்து வந்திருக்கின்றன. வரலாற்று நிகழ்வுகளை அதன் தன்மை மாறா கற்பனையின் துணையோடு வெளிப்படுத்துவதால் அது வரலாறு அல்ல என்று நிராகரித்துவிட முடியாது. ஏனெனில் வரலாறும் பல வேளைகளில் புனையப் பட்டுத்தான் தொடர்புடைய ஆசிரியர் விரும்பும் வடிவத்தை அடைகிறது என்பது மறுக்க முடியா உண்மை. வரலாறும் இலக்கியமும் மொழி என்கிற பொதுவான ஊடகத்தின் வழியே வாசகனை அடைகின்றன. மற்றொருபுறம், வரலாறோ அல்லது இலக்கியமோ வாசகனின் மதிப்பீட்டால் அதனதன் உரிய இடத்தை அடைகின்றன என்பதும் கவனிக்கத் தக்கதாக இருக்கிறது. வாசகன் என்கிற தனி மனிதன் விரும்பினால் வரலாற்றில் இருக்கும் இலக்கியத்தையும் இலக்கியத்தில் இருக்கும் வரலாற்றையும் பகுத்தாய்ந்து விளங்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. அப்படி செய்வதால் ஒன்றும் கட்டமைக்கப்பட்டு அறியப்பட்ட புனிதம் கெட்டுவிட போவதில்லை ஒருவேளை அத்தகைய புனிதம் ஏதேனும் பொசுங்கினால், அதன் நீட்சி இதுவரை மறுதலிக்கப்பட்ட எளிய மாந்தரின் வாழ்க்கை பிரதிபலிப்பிற்கு தன் இடத்தை கோரும் சித்தரிப்பிற்கு வித்திடக் கூடும் (Pudhumaipithan, 2018).

## ஒரு சராசரி தினத்தின் வரலாறு

அன்றாட வாழ்வை நகர்த்துவதில் சராசரி மனிதர்கள் படுகின்ற இன்னலை ஒரு நாள் கழிந்தது என்கிற கதையில் புதுமைப்பித்தன் விளக்குகிறார். போதிய வருமானம் இல்லாத நிலையில் ஒரு குடும்பம் படுகிற இன்னலை அதில் ஆவணப் படுத்தி இருப்பார் அவர். அதையும் அளவுக்குமீறி

மிகைப்படுத்தாமல் அதே வேளையில் கதை மாந்தர்களை பணத்தேவை என்கிற சுழலுக்குள் சிக்கவைத்து கதை நகரும் விதம் எளிய எதார்த்தத்தை இடியென இறக்கிச் செல்கிறது. பணம் போதாமை நிலையை சொல்வதோடு நின்று விடாமல், அதனால் முருகதாசனின் குடும்பம் படுகிற இன்னலை விளக்குவதோடு விலகி விடாமல், பெண்ணடிமை குறித்தும், சமூக ஏற்றத்தாழ்வு குறித்தும், உழைப்பு சுரண்டல் குறித்தும் ஏழ்மையால் அழித்து ஒழிக்கப் படும் மனித ஆற்றல் குறித்தும் அவர் பேசத் தவறவில்லை. முருகதாசர் அதீத ஆற்றலை கொண்டிருந்தாலும் தனக்கு கிடைத்த பணமீட்டும் வாய்ப்பை வேறு வழி இன்றி ஏற்றுக்கொள்வதை இவ்வாறு விளக்குகிறார் ஆசிரியர். “முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சாமர்த்தர். சாகாவரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர் வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு, சோயாபீன் முதல் மெழுகுவர்த்தி வரையிலும் வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார்.” இவருக்கு இருக்கிற நாவல் படைக்கவேண்டும் என்கிற ஆற்றலும் நிராசையாக போய்கொண்டிருப்பதை சொல்வதின் ஊடே அடித்தள மக்களின் வாழ்வு திறமைகள் இருந்தும் வஞ்சிக்கப்படுவதை குறிப்பால் உணர்த்துகிறார் (Pudhumaipithan, 2018). அதுபோல், ஏற்றத்தாழ்வுகளை பேசுகிற இடமாக முருகதாசரின் மகள் அலமு எதிர் வீட்டில் இருக்கும் குழந்தை மாதிரி ரிக்ஷா சவாரி செய்யஆசைப்படுவதையும் அதனை அவளின் தந்தை கண்டிப்பதையும் காண முடியும். அது குழந்தைகளின் மனதில் ஏற்படுத்திகிற தாக்கம் தீவிரமானது. இந்த நிலையே அநேக ஏழை குழந்தைகளுக்கு வாய்க்கிறது என்பது மறுக்க இயலா ஒன்று. குழந்தைகளின் ஆசை பொதுவானது, இயல்பானது. இயற்கையானது எனினும் இங்கு ஏழைக்கு ஆசைகள் எட்டாக்கனியாகவே இருக்கின்றன என்கிற தகவல் இங்கு பதிய வைக்கப் படுகிறது. “அப்பா, அவன் பங்கஜத்தே மாத்ரம் கூட்டிக்கிட்டே போறானே!" என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும்! அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா?” ரிக்ஷா மற்றும் குழந்தை ஆகிய இரண்டுமே கருத்து வெளிகளுக்கு அப்பாற்பட்டவை (Pudhumaipithan, 2018). ஒன்று உயிரற்றது பிந்தியது உயிராக புழங்கத் தொடங்கி சில ஆண்டுகளை மட்டுமே நகர்த்தி இருக்கும் சிறுமி. அவ்விரண்டையும் இந்த மனித ஏற்ற தாழ்வு பாதிக்கிற ஒன்றாக இருப்பதை சுட்டி அதன் அதிபயங்கர இரக்கமற்ற தன்மையை அவர் வெளிக்கொணர்கிறார். அதுபோல் பெண்களின் வாழ்வின் பெரும்பகுதி சமைப்பதிலும், இல்லறம் சார்ந்த அடிமைத்தனமான நிர்வாகத்திலும் விரையமாவதை இந்த கதையின் துவக்கத்தில் விவரிக்கிறார். முருகதாசர் வீட்டில் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு செல்கிற இடம் எந்த வரலாற்று ஆவணமும் தொடாத இடம். காரணம் அது மாட மாளிகை அல்ல. ஆடம்பர வனப்பு அங்கு கிடையாது. ராஜ குலத்து புருஷர்களோ அழகாய் மட்டுமே இருக்க சபிக்கப்பட்ட யுவதிகள் நடமாடும் இடம் இல்லை இது. அதன் வர்ணிப்பு இவ்வாறு செல்கிறது. “உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம் எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையராவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலு பேர் வந்தால் பேச இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார் இடைவழியில், குழாயடியில், உள்ள வழுக்குப் பிரதேசம். அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வே' யை எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம் "கமலம்!" என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தார். உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, "வீடோ லட்சணமோ! விறகைத்தான் பார்த்துப் பாத்து வாங்கிக் கொண்டு வந்தியளே! ஒங்களுக்கிண்ணு தண்ணீலே முக்கிக் கொடுத்தானா?” ஏழை குடும்பம் புழங்கும் வரலாற்றை படம்பிடித்து காட்டுகிற இந்த வர்ணிப்பு அவசியம் பதியப்படவேண்டிய காலத் தகவல். இதனை புறந்தள்ளுவது கட்டாயம் மனிதப் பிழையே அன்றி வேறு அல்ல. விறகுகளோடு கமலம் நடத்துகிற போராட்டம் நாடுகளின் இடையே நடந்த யுத்தத்திற்கு சற்றும் சளைத்தது கிடையாது. அதனை கண்டு தன் மனையாள் மீது அன்பு காட்ட வேண்டிய முருகதாசர் எரிச்சல் அடைவது ஆண் ஆதிக்க மன பிரதிபலிப்பு. பணம் சம்பாதிப்பதை காட்டிலும் அது இல்லாமல் அனுதினமும் குடும்பத்தை

அதன் கருணையற்ற பாரத்தை சுமக்கிற கமலம் போன்ற பெண்களிடம் சண்டையிடும் ஆணின் உளவியல் எழுதப்படா வரலாற்றின் கருப்பு பக்கங்கள் என்பதை இந்த கதை நேர்த்தியாய் புலப்படுத்துகிறது (Pudhumaipithan, 2018).

## அரசர்களின் தலைநகரம் அல்ல எளியவர்களின் பொன்னகரம்!

வரலாற்றின் பக்கங்கள் ஏந்திக்கொள்ள விரும்பாத எண்ணற்ற நிலப்பகுதிகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை பெரும்பாலும் மனிதர்கள் ஒருகாலத்தில் வாழ்ந்தார்கள் என்று சில இடங்களை எடுத்துச் சொல்வதில் ஆர்வம் காட்டுகின்றனவே அன்றி மனிதர்கள் சகிப்புத் தன்மையோடு வாழ்ந்து ஜெயிக்கிற, வாழ்வை நகர்த்துகிற இடங்களை பதிய வைக்க ஏனோ தயங்குகின்றன. அந்த வழக்கத்திற்கு எண்ணற்ற காரணங்கள் இருக்கக்கூடும். அது இருந்துவிட்டுப் போகட்டும். அதனை பேசுபொருளாக ஆக்குவதன் மூலம் அப்படிப்பட்ட நிலச் சூழலில் வசிக்கிற மாந்தரின் வாழ்க்கையை வரலாற்றிற்கு உரிய முக்கிய தரவாக தரம் உயர்த்துவது அவசியம். அல்லது அவ்வாறு பதிய வைக்கப்பட்ட சம்பவங்களை ஊடுருவிப் பார்த்து, அங்கு இழையோடுகிற எதார்த்த வாழ்வியலை, அரண்மனை வாசத்திற்கு முரண்பட்டு நிற்கும் அதன் அடிநாதத்தை அங்குலம் அங்குலமாய் விளக்கிச் சொல்வது காலத்தின் கட்டாயம். இந்த இரண்டையுமே புதுமைப்பித்தன் தனது பொன்னகரம் என்கிற சிறுகதையில் அச்சுப் பிசகாமல் செய்து முடித்திருக்கிறார். வரலாற்று ஆசிரியர்கள் பேருவகையோடு பேச விரும்புகிற சகல வசதிகளும் கொண்ட தலைநகரம் பற்றின வர்ணனைகளை கற்பனையை கட்டவிழ்த்துவிட்டு சொல்லுவது ஒன்றும் பிரம்ம பிரயத்தனம் அல்ல. காரணம் அவ்வாறு சொல்லுகிற முன்னுதாரணங்கள் பல எழுத்து உலகத்தில் உலவுகின்றன. அதற்கு நேர் எதிரான ஒரு கட்டமைப்பை, தமிழ் இலக்கியத்தின் ஊடே ஒரு வரலாற்றிற்கு நிகராக பேசுவது மிகவும் கடினம். அத்தகைய தகவல் சித்தரிப்பாக வெளிப்பட்டாலும் அதில் இரண்டறக் கலந்திருக்கும் வாழ்வியல் எதார்த்தத்தை உண்மை அல்ல என்று சொல்லி நிராகரிக்க முடியாது (Pudhumaipithan, 2018).

இந்தக் கதையில் இரண்டுமுறை பொன்னகரம் அறிமுகப்படுத்தப்படுகிறது. துவக்கத்திலும் இறுதியிலும் முறையே அது நிகழ்கிறது. ஆரம்பத்தில் அதன் தன்மையை அது காட்சிதரும் விதத்தை சொல்கிறது. “பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதனப்பட வேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.” இறுதியில் அவ்விடத்தில் வாழும்படி சபிக்கப்பட்ட அம்மாளு என்கிற பெண்ணின் கொடும் நிலையை பேசி கலங்க வைக்கிற ஒன்றாக முற்று பெறுகிறது (Pudhumaipithan, 2018). ஆனால் அத்தகு கடுமையான இடத்தில் வாழுகிற பெண்களின் நிலை முற்று பெறுவதே இல்லை என்பதையும் இறுதியாக சொல்வதின் வழியே அழுத்தமாக பதியவைக்க அந்த கதை களம் தவறவில்லை. அது நிஜத்தை நிர்மாணித்து அடைகிற உறுதி அரசர்களின் கோட்டை மதில்களை காட்டிலும் இறுக்கமானது. அத்தகு உறுதியில் பொசுங்குகிற கப்பிதம் ஆண்டாண்டுகளாய் பெண்களை அடக்கி வைக்க கையாளப்பட்ட ஒன்று. அதனை தாங்கிப்பிடிக்கிற ஒருதலைபட்ச வரலாற்று மரபு அம்மாளுவின் கையறு வாழ்விற்கு முன் உடைந்து சிதறுகிறது. “சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன். இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்! என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!” குடும்பம் மற்றும் கற்பு போன்ற பாரங்கள் ஏற்றப்பட்டு கருகிய வரலாற்று நெடுகிலும் ஒரு பெண் அனுபவித்துவந்த சித்ரவதையை ஆவணப்படுத்துகிறார் (Pudhumaipithan, 2018). இத்தகைய அநீதியை அனுபவித்தும் அதனை புலப்படுத்த இயலாத அடக்குமுறையில் கிடக்க நேரிட்ட பெண்களின் நிலையை, காலக்கோடுகள் கவனிக்க தவறிய கற்பின் கள்ளத்தனத்தை, அதன் பின்னால் ஒளிந்து கிடக்கும் சமூக பொறுப்பின்மையை பொட்டில் அறைந்தால் போல் கவனப்படுத்துகிறார். இது தவிர்க்கப்பட வேண்டிய தரவு அல்ல. ஒருவிதத்தில் விழிப்பூட்டப்படவேண்டிய ஆணாதிக்க விபரிதம். அம்மாளுவின் கணவன் முருகேசன் மதுவுக்கு மயங்கி மதி இழந்து அவனது குதிரையோடு மிருகமாக விழுந்ததால், இத்தகைய துர்பாக்கிய நிலைக்கு

தள்ளப்படுகிறாள் அவள். இதுபோன்ற எண்ணற்ற பெண்களின் வரலாற்றை தீட்டுவது அவற்றை அவசியமான ஆவண அம்பலத்தில் ஏற்றுவது காலத்தின் கட்டாயம்!

இந்தக் கதையில் மனிதன் வாழ பழகிக்கொண்ட இடத்தின் விஸ்தரிப்பு புவியியலுக்குள் அடங்காத ஒன்று. அதனை விவரிக்கையில் ஏராளமான வரலாற்றின் நகர அமைப்புகள் சிந்தையில் வந்துபோகின்றன. அலங்கரிப்பான வார்த்தைகளை கொண்டு கம்பீர ராஜபாட்டைகளை கட்டி உரைக்கிற அணுகுமுறையை பற்றி எள்ளி நகையாடுகிறது இந்த எதார்த்த சித்தரிப்பு. இடத்தின் தன்மையை வைத்து அங்கு யார் வசிக்க முடியும் என்பதை ஒருவாறு யூகிக்கலாம். அல்லது ஏழைகள் வாழும் இடம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற எழுதப்படாத விதியின் நியதியாகவும் இருக்கலாம். இந்த அபத்த கற்பிதத்தை, அது நிரந்தரமாக மேல்தட்டு வரலாற்றின் ஏடுகளில் இடம்பெறாமல் பார்த்துக் கொண்டதை இது போன்ற விவரிப்புகள் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. “ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அது தான் அங்கு 'மெயின்' ராஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால், இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல். இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும்பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' - அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும்? - அதுதான்.” புனிதம் என்று சொல்லப்படும் கங்கையையும் அதன் நிஜ தோற்றத்தையும் விளங்கிக்கொண்டால், யமுனை சிலிர்த்து ஓடுவதாக சிலாகிக்கப்படுவதையும் அதற்கும் வறிய வாழ்விற்கும் தொடர்பு இருப்பதை பெரிதாக பேசாமல் இருப்பதையும் உள்வாங்கிக் கொண்டால், ஆசிரியர் லாவகமாக சொல்ல விழைகிற தகவலை கிரகித்துக்கொள்ள முடியும் (Pudhumaipithan, 2018). இதில் அரசாங்கத்தின் இரட்டை வேடத்தையும் அதன் இரக்கமற்ற ஏழை பங்காள பாசாங்கையும் குறிப்பால் விளக்குகிறார். மற்றொருபுறம் வரலாற்றில் இடம்பெறும் உயரிய மனிதர்கள் அல்லது உயர்தட்டு வர்க்கம் புழங்கும் இடங்கள் பேர் எழில் வாய்ந்த அழகின் சின்னங்களாக கவனப்படுத்தப்படும் அதே வேளையில், அன்றாடங்காச்சிகள் பிழைக்கும் இடங்கள் பூலோகத்தில் ஒரு நாற்றம் பொதிந்த வேற்று கிரகம் என்பதாக இருந்து வருகிறது. அதனை இத்தகைய கதைகளை தவிர வேறு எந்த வரலாற்றின் பத்திகளும் அடையாளப்படுத்த விழைந்ததாக தெரியவில்லை. அப்படியே அது நிகழ்ந்தாலும் அதனை அங்கீகரிக்கப்பட்ட வரலாறாக அறிவு புலத்தின் புழக்கத்தில் கொண்டு செலுத்துவது அவ்வளவு எளிதல்ல!

## தனி ஒருவனின் தவிர்க்க இயலா வரலாறு

வரலாறுகள் கண்டிப்பாக ஒரு பொதுவான வரையறைக்கு உட்பட்டு எழுதப்படுகிறது என்கிற நம்பிக்கை நிச்சயம் அபத்தமானது. எந்த கட்டமைப்பையும் எடுத்து வைத்துக்கொண்டு விரிவான வரலாறு எழுத புறப்படுகிற அணுகுமுறை வரலாற்றில் இருந்தே துடைத்து எறியப்பட வேண்டிய ஒன்று. அப்படி கட்டமைப்பு என்ற ஒரு தயாரிப்பை எடுத்து கொண்டு வரலாறு எழுத முயன்றால் அது எண்ணற்ற உள்ளீடுகளை புறக்கணிக்க வழிவகை செய்து விடும். இதுதான் வரலாறு அது இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற முன் தயாரிப்புகள் அதன் சர்வாதிகார எழுத்து நோக்கத்திற்கு மட்டுமே துணை போக முடியும். மாறாக வரலாறு புனையும் முறையை நெகிழ்வு தன்மையுடனும், சூழலுக்கு ஏற்றவாறு தகவமைத்து கொள்ளக்கூடிய ஜனநாயகம் கொண்டதாகவும், சமத்துவத்தை பறைசாற்றுகிற பக்குவம் கொண்டதாகவும் அமைத்துக்கொள்வது பலதரப்பட்ட ஒடுக்கப்பட்ட குரல்களை ஒலிக்கச் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். இதனை அடுத்த படிநிலைக்கு எடுத்துச் செல்வதற்கு அத்தகைய கட்டுகள் அற்ற தன்மை தவிர்க்க இயலாத ஒன்று. பல குழுக்களின் உணர்வுகளை வரலாறாக அச்சில் ஏற்றும் அதேவேளையில், எல்லோருக்கும் பொதுவாக இருக்கக்கூடிய பசி உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் எவ்வாறு சமமற்ற முறையில் கிடைக்கிறது, குறிப்பிட்ட சூழலில் வாழும் மனிதர்களுக்குள் இருக்கக்கூடிய முரண்பட்ட வாழ்வியல் அணுகுமுறைகள் எப்படி அந்த சூழலுக்கு உட்பட்டு வசிக்கிற மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வினை விதைக்கிறது ஆகியவற்றையும் உன்னிப்பாக வரலாறாக மாற்றுவது இன்றியமையாதது. தனிமனிதனை வஞ்சிக்கிர இடத்தில் நிறுவனங்கள் மட்டுமல்ல

அத்தகைய மனிதன் புழங்குகிற இடத்தில் வசிக்கும் சக மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதையும் வரலாறாக அங்கீகரிப்பது பெரும் கருத்தாடல்களில் இருக்கக்கூடிய அரசியலை புரிந்துகொள்ள துணை புரியும். அத்தகைய மனித விழுமியங்களை புதுமைப்பித்தன் தனி ஒருவன் என்கிற சிறுகதையில் அழுத்தமாக எடுத்தாண்டிருக்கிறார். இந்த கதையில் வரும் அம்மாசிச் சாம்பான் எதிபாரா வாழ்க்கை இழப்புகளாலும், இடைவிடாது துரத்திய மனித அசம்பாவிதங்களாலும் தன்னை ஏழை அம்மாவாசை பரதேசியாக மாற்றிக்கொள்ளும் கதிக்கு தள்ளப்படுகிறார். இந்த கதையின் ஆரம்பத்தில் புதுமை பித்தன் ஏழைகளுக்கு வழங்கப்படாத உரிமை குறித்து பேசுகிறார். அது அவர்களின் இருப்பை பெரிதென கருதாத மேல்தட்டு எழுத்து மனோபாவத்தை காட்டுவதாக தென்படுகிறது. அந்த அனுபவங்கள், அவர்களின் வாழ்வியல் நடைமுறைகள் அச்சுக்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தொடர்பான அவரின் விமர்சனத்தை தனது பாணியில் கேலிக்கு உள்ளாக்குகிறார். “இவனுடைய வளர்ச்சிப் படலத்தைப் பற்றிய பிள்ளைத் தமிழ் யாரும் எழுதிவைக்காமல் போய்விட்டதால் இருபது வயது வரைமட்டுமுள்ள சரித்திரக் குறிப்புகள் கிடைக்கவில்லை. கொஞ்சநாள் பண்ணையில் வேலை பார்த்து வந்ததாகவும் தெரிகிறது. பிள்ளையவர்கள் மனமுவந்து கொடுத்த சிறிய கடன் தொகையைக் கொண்டு கலியாணமும் நடந்தது. நடந்த மூன்றாம் மாதம் இவன் தாய் பரகதி - பறையருக்குப் பரகதியடைய உரிமையுண்டோ என்னவோ - செத்துப் போய்விட்டாள்.” இந்த வலி நிறைந்த வரிகள் உணத்தும் மிக முக்கியமான சேதி ஏழைகளின் சமத்துவம் அற்ற வாய்ப்பு மற்றும் வாழ்க்கை தொடர்பானது. அவர்களுக்கு தங்களின் அபிமானத்திற்கு உரிய விழுமியங்களை வெளிப்படுத்த அறிவு தளத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் கிட்டுவதில்லை. அதனையும் யாரோ ஒரு ஆய்வாளன் தலையிட்டே ஏழைகளின் சீரிய கலாச்சாரத்தை பதிப்பிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனையும் ஆய்வேடு என்கிற பதத்தில் ஒரு குறிப்பிட்ட வாசிப்பு எல்லைக்குள் சுருங்குகிற ஒன்றாக தான் பார்க்க முடிகிறது (Pudhumaipithan, 2018). இத்தகு கோணத்தில் அலசினால் புழக்கத்தில் இருக்கும் உயர்தட்டு வரலாறுகளின் உண்மை முகம் புரியும். இங்கு ஆசிரியர் பேசுகிற ஆண்டை மற்றும் அடிமை முறையில் அம்மாசிச் சாம்பம் போன்ற அடித்தட்டு வர்க்கம் நசுக்கப்படுவது, மேலும் தர்க்கரீதியாக உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட நரகம்-சொர்க்கம் போன்றவைகளின் பின்னால் இருக்கும் சூழ்ச்சி ஆகியவற்றை தோலுரிக்கும் எதார்த்த வரலாறுகள் புனையப்பட வேண்டியது கட்டாயம்!

சக மனிதனை அந்நியப்படுத்துகிற ஏராளமான சடங்குகளும், வழிபாட்டு முறைகளும், அவற்றிக்கு ஒத்தூதுகிற சாதிய கொடுமைகளும் மக்களிடையே இன்னும் வழக்கத்தில் இருக்கத்தான் செய்கின்றன. அது கொண்டிருக்கும் பெரிய ஆபத்தே அதனுள் இருக்கும் அதிதீவிர மனிதமற்ற பிற்போக்குத் தனமான சடங்கு சட்ட திட்டங்களே ஆகும். அதனையும் புதுமைப்பித்தன் சாடுகிறார். அவ்வாறு சாடுவதன் வழியே அதனை வெளிக்கொணரவும் செய்கிறார். இந்த வெளிப்பாடே இங்கு வரலாறுகள் பேசா பகுதிகளாக காண கிடைக்கின்றன. அத்தகைய இடங்கள் மக்களின் மனசாட்சிக்கு வைக்கப்படும் குட்டாக இருக்கின்றன. “இருளிலே ஒரு உருவம் நகர்ந்து நகர்ந்து சோற்றுப் பானையை அணுகுகிறது. சுவாமியார்தான். பசியின் தனியரசிற்கு முன் எந்தச் சுடலைமாடன் தான் எதிர்க்க முடியும்? வாரி வாரி ஆத்திரத்துடன் கொதிக்கும் சோற்றை வாயில் திணிக்கிறார். அவ்வளவுதான், ஒரு கவளத்திலே இவருடைய இவ்வுலக ஆசை நிறைவேறியது. சற்றுத் தூரத்திலிருந்த சுடலை பக்தர்கள் இவர் ஒரு கவளம் எடுக்கும்போதே கண்டு தடுக்க ஓடிவந்தார்கள். கிட்ட நெருங்கியதும் தண்டிப்பதற்குச் சுவாமியாரின் பிணம்தான் கிடந்தது. "மாடனின் சக்தி", "அருள்" என்று வியந்தார்கள். "பறப்பயலுக்கு வேண்டும்" என்றார்கள். இதையெல்லாம் கேட்க ஏழை அம்மாவாசைச் சாமியாருக்குக் கொடுத்து வைக்கவில்லை!” வெகு நாட்களாக பசியாக இருக்க நேரிட்டவனை, தெய்வ வழிபாட்டில் அந்த மக்களிடம் இல்லாத மனித நேயத்தோடு மோதவிட்டு உண்மையின் கோர முகத்தை எடுத்துரைக்கிறார் (Pudhumaipithan, 2018). இது பல சமூகங்களுக்கு இடையே இருக்கிற ஒரு தவறான பழக்கம் என்பதை சொல்லி தெரிய வேண்டியது இல்லை. அதிலும் அந்த ஏழை அனுபவித்த துயரை உணராது அவன் இறந்ததில் திருப்தி கொள்கிற மனோபாவத்தை அடித்தள வரலாற்றை புறக்கணிக்கும் மேட்டுக் குடி மன ஓட்டம் எனக் கருதத் தோன்றுகிறது. அவர்கள் அம்மாவாசை சாமியாரின் சாதியை உச்சரித்து அவரின் இறப்பில் புளகாங்கிதம் அடைவதை அதற்கு சான்றாகச் சொல்லலாம். வரலாறுகள் அவற்றின் பக்கங்களில் சர்வதேச அளவில் எழுந்த உணவு பஞ்சம் குறித்தே அதிகம் அங்கலாய்த்து இருக்கின்றன.

அதற்கு காரணம் அத்தகைய நிலை ஆள்பவரையும் அவருடன் நெருக்கத்தில் இருக்கும் இதர சமூகங்களின் உயர் பகுதியினரையும் பாதித்ததாக இருந்திருக்கும். ஆனால் அனுதினமும் பசிக்கு உயிர் இழக்க நேரிடும் வர்க்கத்தினரின் அனுபவ நாள் குறிப்புகள் வரலாற்று ஏடுகளாக உருவம் தரிப்பதில்லை. ஒருபுறம் சாமிக்கு படையல் என்கிற பெயரில் புனிதமும், மித மிஞ்சிய உணவும் ஒருசேர உற்பத்தி செய்யப்படுகிறது. அவை இரண்டுமே ஏழைகளையும் இதர சாதி மாந்தர்களையும் விளக்கி வைப்பதில் குறியாய் இருக்கின்றன. அவைகள் தீண்டாமையின் ஊற்று கண்ணாக காலம் தோறும் இருந்து வருகின்றன. அத்தகு பிரிவினைகள் குரிஹ்து பேசுவது முக்கியம். காரணம் ஒருவிதத்தில் அவையே சமுக கிழ் மற்றும் உயர் ஆகிய அடுக்குகளை உயிர்ப்புடன் இயங்க வைக்கிற காரணிகளாக தொடர்கின்றன. அந்த கதையின் இறுதியில் இவ்வாறு பாகுபாடு பாராட்டிய கிராம வாசிகள் ஒன்றிணைந்து மானுட ஒற்றுமை மற்றும் சமத்துவம் குறித்து லயித்து பாடுவதாக ஆசிரியர் குறிப்பிடுவது மனிதர்களுக்குள் இருக்கிற பழக்க வழக்க போலித்தனத்தை நகை முரணாக காட்டுவதாக இருக்கிறது.

## முடிவுரை

இந்த கட்டுரையில் இலக்கியம் கொண்டிருக்கும் வரலாற்று தன்மை பெரிதாக கவனப்படுத்தப்பட்டது. சமுகத்தின் அடித்தளத்தில் அமிழ்த்தப்படும் சராசரி மக்களின் வரலாற்று ஏடுகளாக அத்தகைய எழுத்தாக்கங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பது சான்றுகளோடு இங்கு அலசப்பட்டது. அவ்வாறான எதார்த்த வரலாறுகளை இது போன்ற நவீன கோட்பாடுகளை கொண்டு கட்டமைக்க முடியும் என்கிற செய்தி இதன் வழியே உணர்த்தப்பட்டது. அதனை அனுபவம் மற்றும் கலாச்சாரத்தின் பரிணாமங்களை கொண்டு எடுத்தால வேண்டும் என்கிற முறை ஓரளவுக்கு கையாளப்பட்டது. அடித்தள மக்களின் வாழ்வியலோடு இரண்டற கலந்திருக்கும் நுட்பமான மானுட விழுமியங்களை தவிர்க்க இயலா தரவுகளாக தரம் உயர்த்துவதே எதார்த்த வரலாறு என்கிற ஆய்வுப் பொருள் இயன்றவரை நிறுவப்பட்டது.

## References

Carr, EH. (1967) What is History, Vintage Books, UK.

Catherine, G., Greenblatt, S. (2001) Practicing New Historicism, The Chicago University Press LTD, USA.

Eagleton, T. (2008) Literary Theory an Introduction, Blackwel Pub Ltd, UK

Mills, S. (1997) Discourse, the New Critical Idiom, London, UK

Pudhumaipithan, (2018) Sirukadhaigal, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License